# அருட்பெருஞ் ஜோதி

# ARUT PERUM JOTHI

அருள் 15]　　ஜூலை & ஆகஸ்ட் 1974　　[ஜோதி 7 & 8




ஓங்குக சன்மார்க்கம்　　　　வளர்க சமரசம்

அமைதி அகம்" நெ. 2, அருள்ஜோதி இராமலிங்க மிஷன் ரோட், சென்னை-81.

# அருட்பெரும் ஜோதி

"எல்லாம் செயல்கூடும் என்ஆணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தானை ஏத்து"

அருள் 15]    ஜூலை & ஆகஸ்ட் 1974    [ஜோதி 7 & 8

## ஒளிக்கதிர்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| தமிழுலகு விழைகிறது-வரலாறு விரிகிறது! | .... | 1 |
| இராமலிங்க வள்ளலாரும் இறவா அழியா உடல் கரைத்த கூட்டுச் சாதனையும் | .... | 5 |
| வள்ளலார் மலருக்கு முதல்வர் கலைஞரின் செய்தி | .... | 14 |
| எல்லா உயிரும் தொழும்! | .... | 15 |
| அடிகளார் விருப்பம் | .... | 18 |
| மருத்துவம் | .... | 22 |
| வள்ளலார் நெறி வாழ்க! | .... | 23 |
| சுத்த சன்மார்க்கம் | .... | 24 |

# இராமலிங்க வள்ளலாரும் இறவா அழியா உடல் கரைந்த கூட்டுச் சாதனையும்

(T. R. துளசிராம், ஸ்ரீ அரவிந்த ஆசிரமம், பாண்டிச்சேரி)

உலக வாழ்வு தெய்வீகமாகத் தழைப்பித்து மரணமிலாப் பெருவாழ்வு அளிக்கும் அருட்பெருஞ்சோதிக்குத் தம்மை முழுதும் அர்ப்பணித்துக்கொண்ட இராமலிங்க வள்ளல் பெருமானின் நூற்றாண்டு சித்தி வருடத்தில், அவர் சென்ற புதுமை வழியினையும், வகுத்த வழிபாட்டினையும், அடைந்த திவ்ய தரிசனங்களையும் ஆன்ம அனுபவங்களையும் சத்யஞான அருட்பேற்றுச் சித்திகளையும் நம் உள்ளங் கனிய நோக்குவோம். அவர் வாழ்வின் முக்கியமான கூட்டு இலட்சியங்களையும் அவை நிறைவேற தனிப்படவும் கூட்டுச் சாதனையாகவும் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் முடிவில் தம் இறவா அழியா உடலை உலகமக்களின் தெய்வீக வாழ்விற்காக அர்ப்பணித்துப் பலியாகக் கரைத்துச் சென்ற பெருந்தியாகத்தினையும் ஊன்றிப் பார்ப்போம். அன்னாரின் அருட்பா யோக நூல்களையும் ஸ்ரீ அரவிந்தர், அன்னை ஆகியோரின் யோக நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் மறைந்து நின்ற உண்மைகள் பல வெளிப்பட்டன. வள்ளற் பெருமான் தனியாகவும் உலகளவிலும் சாதித்த அரும்பேற்றை உள்ளபடி உள்ளவாறு புரிந்துகொள்ள அவை துணையாக நிற்கும். மேற்சொன்னவற்றை எல்லாம் இங்கு எழுத இயலாவிடினும் ஒப்பீடு ஆய்வின் முடிவுகளை மாத்திரம் சுருக்கமாகத் தருகிறோம்.

வள்ளலார் ஆன்மீகத் துறையில் பலப்பல படிநிலைகள் ஏறி அதாவது நிர்மல ஜீவசாக்கிர சொப்பன சுழுத்தி நிலைகள் (Psychic states or levels), பரசாக்கிர சொப்பன சுழுத்தி நிலைகள் (Spiritual Mind states or levels), சிவசாக்கிர சொப்பன சுழுத்தி நிலைகள் (over mind states or levels) இவற்றை எல்லாம் கடந்து ஞானப் பெரு வெளி (Supermind) ஏறி அதன் சுத்த சிவசாக்கிர சொப்பன சுழுத்தி துரிய நிலைகள் எல்லாம் அடைந்து (Poises or sessions of Super mind) அதன் மேல் அதீதத்தில் சச்சிதானந்த உலகுகளின் அனுபவ நிலைகள் பெற்று, முடிவில், உலகின் பரிணாமக்கிரம வாழ்விற்காகவும் மரணமிலாப் பெருவாழ்விற்காகவும் ஞானப்

பெரு வெளியின் சத்ய ஞான சபை (Summit Supermind), சிற்றம்பலமென்னும் சிற்சபை (comprehending supermind) பொன்னம்பல மென்னும் பொற்சபை (apprehending super mind) சன்மார்க்க சபை என்னும் அடி, நிலை அல்லது கீழ்ச்சபை (Tertiary supermind) இவற்றை ஒரு சேரச் சொந்தமதாக்கிய ஒரு பெருநிலையில் நிலைத்து நின்றார். அருட்பெருஞ்ஜோதி என்னும் சத்தியஜோதியால் (Truth-Light) சத்ய ஞான மெய்யுணர்வைப் பெற்றார். அதனால் அருட்பெருஞ்ஜோதி நேர்முகமாகத் தம் முடியில் நிலைக்கப் பெற்றார். அதன் பயனாக இறவாமையும் அழியாமையும் ஒருங்கே அமையப் பெற்ற தூல வாய்மை உடம்பை (Truth-Conscious Physical Truth-Body) பெற்றார். தலையில் தெய்வீக நேர் ஒளி (Direct divine Light) தங்கினால் உடனடியாக உடல் உருமாற்றம் (Transformation of body) அடைவது சாத்தியம் என ஸ்ரீ அரவிந்தரும் தான் கடைசியாக எழுதிய 'சூப்ராமெண்டல் மானிபஸ்டேஷன்' எனும் புத்தகத்தில் கூறியுள்ளார். வள்ளலார் இறவா அழியா தூல சுத்த தேகமும், சூட்சும பிரணவ தேகமும், காரண ஞான தேகமும் ஒருங்கே இணையப் பெற்ற பெரும் பேற்றை அடைந்தார். இறந்தாரை எழுப்பும் வல்லமை பெற்றதாக அறிவித்தார். எனினும் அதை நடைமுறையில் செய்து காட்ட ஆண்டவனின் திருவுளம் அனுமதிக்கவில்லை போலும்.

அவருடைய தூல உடம்பே பொன்னொளி நிரம்பி, அமுதம் ததும்பி, உடல் தாதுக்களெல்லாம் தெய்வீக மாறுதலுற்று மரணமிலாத் தன்மை அடைந்தது. எலும்பும் தசையும் நெகிழ்ந்து, இரத்தம் இறுகி, மூளை விரிந்து, சுக்கிலம் ஒரு துளியாக உறைந்து, நிழற்சாயை இல்லாப் பொன்னொளியுடல் பெற்றார். அவருடைய ஆன்மா, மனம், உள்ளம், பிராணன், இந்திரியம் ஆகிய இவைகள் மட்டுமல்லாமல் தூல உடம்பும் ஆண்டவனுடன் ஒன்றித்து, தூக்கமும் மறப்புமின்றி இன்பச் சக்திகள் பெருகி சத்ய ஞானநிலையுணர்ந்து நேருக்கு நேராக ஆண்டவனை அனுபவித்தது. பிரணவ தேகத்தின் இயல்பால் வேண்டும்போது தம் தூல உடம்பை மறைத்துக் கொள்ளவும் மறுபடியும் தோற்றிக் கொள்ளவும் முடிந்தது எனினும் தூல உடல் தெய்வீகத் தன்மையும் இறவா இயல்பும் அடைந்து எல்லோர் கண்ணுக்கும் தெரியும்படி அவர் தூலத்திலும் வாழவே செய்தார்.

"கூற்று ஒழிப்பித்துச் சிதைவு மாற்றியே", "மரணம் உருத்திறம் தந்து அழியாத் திரு அளித்த கருணாநிதியே" எனப்

பாடுவதால் வள்ளற் பெருமானின் உடல் இறவாத் தன்மை மாத்திரமின்றி எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபெறாத அழியாத் தன்மை அல்லது சிதைவிலாத் தன்மையும் பெற்றிருந்தது என அறிய வேண்டும். இதை விளக்குவோம். முதலாவதாக, ஆண்டவர் திருவுளப்படி - கூட்டுச் சாதனையாக (Collective fulfilment) உலகத்தின் பொருட்டு உடலைக் கரைக்காமல் இருந்திருந்தால் அவர் நம்மிடையே இன்றும் என்றும் உடல் வடிவில் இஷ்டப்பட்ட காலம் அல்லது கால அளவின்றி வாழ்ந்து கொண்டிருப்பார். இறைபணி முடித்தபின் உடலைக் கரைப்பதற்குப் பதிலாக ஒருக்கால் தம் இறவா உடலை விட்டு அவருடைய ஆன்மா பிரிந்திருக்கக் கூடுமாகில் அப்போதும் அத்தூல உடல் அழியாது குலையாது சிதையாது (without disintegration and decomposition) எப்போதும் தன் தெய்வீக உருமாற்றமடைந்த நிலையிலே (in the transformed state of body) நிலைத்து நின்றிருக்கும் என அறிய வேண்டும். இதை ஒருவாறு ஒரு உதாரணத்தால் விளக்குவோம். உயிர் வாழ்ந்து பூமியில் புதைந்த அடிமரமும் பிராணியும் உயிரற்ற கீழ்நிலையான கல்லுருவம் அல்லது கல்படிவமாக மாறிநிலை பெறுவதை ஒரு வகையில் ஒக்கும் (fossilisation). ஆனால் உருமாற்றம் அடைந்த உடலோ திவ்ய ஜோதி தரித்து மேல்நிலையான தூல உடலாக நிலைத்து உயிர் நீங்கிய பினனும் சிதையாது நிரந்தரமாகத் தங்கி உடலுக்கே சிறப்பாக உரித்தான ஒரு வகை உணர்வுடன் விளங்கும் என்க. முதலில் சொன்ன உதாரணம் கீழ் நிலை நோக்கி அஞ்ஞான இயற்கையில் ஏற்படும் ஒரு வகை உருமாற்றமாகும். பின் சொன்னது மேனிலை நோக்கித் தவத்தால் அல்லது அருளால் ஏற்பட்ட தெய்வீக உருமாற்றத்தின் ஒரு பயன் என்க. இவ்வுடலுக்கு அருகில் வரும்வேறு உடல்களைத் தூய்மைப்படுத்தி உருமாற்றத்திற்குத் துணை செய்யவும் கூடும் என நினைக்கத் தோன்றுகிறது.

ஆனால், வள்ளலார் அருட்பெருஞ்ஜோதியை உலகத்தின் பொருட்டு உலகிற்குக் கொண்டு வரவும் குறிப்பாகத் தாம் வாழ்ந்த இடத்தில் அதை நிலைநிறுத்தவும், அதாவது தாம் வாழ்ந்து சிறப்புற்றதால் தம் திவ்யசக்திகள் ஊன்றி நிலைபெற்ற வடலூரில் சிறப்பாக நிலைநிறுத்தவும், எல்லோர் உடம்பிலும் தாம் புகுந்து கொள்ளவும் தம் உடலைக் கரைத்துவிட்டு மறைந்தார்.

வள்ளல் பெருமான் தம் உடலைப் பேருடம்பாகவும் பொன் மலை போன்று பூரித்து வளர்ந்ததாகவும் கூறுகிறார். இதனால்

அவருடைய தூல உடம்பு தெய்வீகப் பொன்னொளி நிறைந்து பொன்னுடம்பாகி இறவா அழியாத் திறம்பெற்றுத் திகழ்ந்தது மாத்திரமின்றி அதன் பின்னணியில் அல்லது அத்துடன் இணைந்து சமமட்டத்தில் பரவித் தாங்கி நிற்கும் (Coextensively) ஆதாரமான இறவாப் பொன்மய பௌதீக வெளியிலும் (golden deathless space of physical existence, but other than the subtle physical) நிலை பெற்றிருந்தது. அதாவது, தூல உடம்பும் அதைத் தாங்கி நின்ற பௌதீக வெளியும் (சூட்சும பூத வெளியினின்று வேறுபட்டது) இரண்டுமே பொன்னொளியுடன் பொன்மயமாகத் திகழும்படி மாறியிருந்தது என்க. மற்றவர்களின் ஊனக்கண்களுக்கு அப்பொன்னொளி தெரியவில்லை. பொன்னுடம்பாகப் பார்க்க முடியவில்லை. ஸ்ரீ அன்னையும் சில சமயங்களில், அதாவது 1970 ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தன் உடலுணர்வு எல்லையற்று விளங்குவதையும் அதன் மூலம் எல்லையற்ற இப்பௌதீக வெளியையும் உணர்ந்திருக்கிறார். ஆகவே வள்ளலார் தம் உடம்பை என்றும் அழியாப் பேருடம்பு என்றோ பொன் மலை போன்ற பொன்னுடம்பு என்றோ அல்லது நித்திய தேகம் என்றோ குறிப்பிடும்போது பொன்மய பௌதீக வெளியின் அடிப்படையான நிரந்தரத் தன்மையையும் (essential permanence of golden physical existence), தூலப் பொன்னுடலின் காரியார்த்தமான (அல்லது விவகார பூர்வமான) நிரந்தரத் தன்மையையும் (practical permanence of golden material physical body) ஒருங்கே குறிப்பிடுவதாகக் கொள்ளவேண்டும். பின் சொன்ன காரிய நிரந்தரத் தன்மை என்பது தம் இறவா உடலை இஷ்டப்பட்ட காலம் — நெடுங்காலம் அல்லது குறுகிய காலம் அல்லது சாஸ்வத காலம் — வாழ்ந்து தாம் வேண்டும் போது அல்லது இறைவன் திருவுளப்படி அதை விட்டுப் பிரியவும் அல்லது கரைத்து மறையவும் சுதந்தரம் உண்டு என்பதை உணர்த்தும். மரணமிலாப் பெரு வாழ்வு அடைந்த நிலையில் எதற்கும் சுதந்தரம் உண்டு. உயிரானது உடலில் புகுவதற்கும் பொருந்தி இருப்பதற்கும் அதை விட்டுப் பிரியவும், பிரியாமல் இருக்கவும் சுதந்தரம் உண்டு எனபதைச் சூசகமாக உணர்த்தி அவ்வழி முறைகளை ஆண்டவனே தருகிறார் என ஒரு பாட்டில் வள்ளலாரே குறிப்பிடுகிறார்.

வள்ளலார் தம் தேகம் கரைத்து மறைந்ததால், உடல் தத்துவத்தைப் பொருத்த மட்டில், மேலே சொன்ன பொன் மயமாக வியாபித்திருக்கும் பௌதீகச் சூழலிலே நிரந்தரமாகத் தங்கியுள்ளார் என அறியலாகும். எனினும் மனம், உள்ளம்,

இந்திரியம், சூட்சுமபூதம் முதலிய மற்ற தத்துவங்களைக் கருதும்போது அவைகளும் நிரந்தரத் தன்மையடைந்து அவ்வவற்றின் கீழுலகங்களிலும் மேலுலகங்களிலும் நிரந்தரமாக உள்ளார் என்க. இது அழியாப் பிரணவதேக இயல்பைக் குறிக்கும். மேலும் ஞானப் பெரு வெளியின் ஞான உடலும் நிரந்தரமாக அவருக்கு அமைந்திருந்தது. அழியா மூன்று தேகம் என்பது மூன்று நிலைகளின் — தூல சூட்சும காரண உடல்களின் — நிரந்தரத் தன்மையையும் ஒன்றோடொன்று பின்னிய தொடர்பையும் குறிக்கும். இவற்றுடன் ஒன்றித்த அவரது ஆன்மா எல்லா உலகங்களிலும் கீழுலகங்களிலும் மேலுலகங்களிலும் இருள் வெளிகளிலும் ஒளி வெளிகளிலும் நிரந்தரமாக இருக்கப் பெற்று அவற்றைக் கடந்தும் உள்ளார், அகண்டமாகவும் உள்ளார் என்பதைத் தெரிவிக்கும். மறுபடியும் அவர் புதிய தெய்வீக உடல் எடுத்து நேரடியாக வரும்போது (precipitation of a divine body on the earth) மேற்சொன்ன பொன்மய இறவா பௌதீக வெளியிலிருந்து திவ்ய உடலைத் தாமே படைத்துக் கொண்டு தோன்றுவார் என அறியலாகும்.

அவர் தம் இறவா உடலைப் பெற்றபின் சுமார் ஒரு வருட காலம் வாழ்ந்தார். அதைக் கரைத்து விட்டு மறைந்து சென்றது ஏன் ? உலகப் பரிணாம வாழ்வின் (evolution of earthly life) பொது லட்சியமும் கூட்டுச் சாதனையும் (collective fulfilment) உள்ளதா என ஆராய்வோம். அருட்பெருஞ்ஜோதி உலகத்தில் வெளிப்படுவதற்காகவும் குறிப்பாக தாம் வாழும் இடத்தில் அது அமர்ந்து நிரந்தரமாக நிலைபெறுவதற்காகவும், உடலும் மரணமிலாப் பெருவாழ்வு எல்லோரும் பெற்று வாழ்வதற்காகவும் அதற்காக எல்லோருடைய தூல உடம்பிலும் தாம் புகுந்து கொள்வதற்காகவும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் அவர் இருப்பிடத்தில் சாந்நித்தியமாக வீற்றிருந்த (concrete presence of the divine) ஒரு நாளில், 30—1—1874 தேதியில் ஆண்டவரின் அருட்சத்தித் துணையால் தம் அழியாத் தூல உடலைக் கரைத்து அதன் இறவாத் தாதுப் பொருள்களையும் சக்திகளையும் இப்பூமியின் சூழலிலே பஞ்ச பூதங்களிலே பதித்து விட்டார். இன்னும் சொல்லப் போனால் பூமிக்கு ஆதார நிலமான கருவெளியிலும் மரண தேவனின் கோட்டைத் தளமான "பேர் இருட்டுப் பெரு நிலத்திலும்" (Inconscient Darkness) கூட நிரந்தரமாகப் பதித்து விட்டார் எனச் சொல்ல வேண்டும். இது இணையற்ற மகத்தான தியாகச் செயலாகும். அவர் உடல் கரைத்து மறைந்த சூழ்நிலை, இலட்சியம், வழிமுறை முதலியவற்றிற்கும் திருஞான சம்பந்தர் மாணிக்கவாசகர் போன்ற பெரிய மகான்கள்

உடல் கரைந்து மறைந்த நிகழ்ச்சிகளுக்கும் மிகப் பெரிய வேறுபாடு உள்ளது. திருமூலரின் திருமந்திரப்படி, சாகாத்தன்மை அடையாமலே, அந்நிலை கூடுவதற்கு வேண்டிய உடல் மாறுபாடுகள் அடைவதற்கு முன்பே, சத்ய ஞான உணர்வு இன்றியே அல்லது பூரணமாக அமையாமலே கூட சம்பந்தர் மாணிக்கவாசகர் போன்றவர்களின் உடலுணர்வும் உயிர் உணர்வும் (physical consciousness and soul's consciousness) ஒன்றிய ஒரு நிலையில் உடல் கற்பூர தீபம்போல் கரைந்து அதன் சத்துப் பொருள்கள் பரமாகிய சுவர்க்கத்திற் சேர்ந்ததாகக் கொள்ள வேண்டும். மறுபடியும் பிறக்கும்போது "பரத்தில் கரைந்த நற்காயம்" திரும்பவும் உடல் உருமாற்றம் ஓங்கிடுவதற்கு (for a complete transformation of body) திரிந்து இங்கே பிறக்கும். ஆனால் வள்ளலாரின் உடல் கரைந்து மறைந்தது மேற்சொன்னதைப் போன்றது அல்ல. அவருடைய திவ்ய இறவாத் தூல உடலின் சாகாத்தலை, வேகாக்கால், போகாப் புனல் போன்ற தெய்வீக மாற்றமடைந்த இறவாப் பஞ்ச பூதப்பொருள்கள் இங்கேயே பூமியின் இயற்கையிலே பதிந்து விட்டன (fixed in the earth-nature). நம்மை எல்லாம் தூய்மைப் படுத்த, மரணமிலாப் பெருவாழ்வு அளிக்க, நம் தூல உடம்பும் தெய்வீக இளமை குன்றா உருமாற்றம் செய்ய, முதியவர்களையும் இளமைக்குத் திருப்ப, இறந்தவர்களையும் தூல உடலுடன் மீண்டும் உயிர்ப்பித்து எழுப்ப, இது போன்ற சித்திகள் தாமும் ஆண்டவரும் எல்லோருக்கும் தெரியும்படி வெளிப்படையாகச் செய்து வீதியிலே விளையாட, இவற்றிற்கு எல்லாம் அடிப்படைக் காரணமாகத் திகழும் அருட்பெருஞ்ஜோதியை உலகமெலாம் களிப்படையும்படி வருவிக்க, அதனை வெளிப்படுத்தி நிலைநாட்ட, அது தழைத்து மிக விளங்கவைக்க வள்ளற் பெருமான் தம்மை ஒரு கருவியாகக் கருதித் தமக்கு அருமையாகக் கிடைத்த பெரும்பேறான அழியா உடலைத் தியாகம் செய்து அர்ப்பணித்துக் கொண்டார். மேலும் தாமே எல்லோருடைய உடம்பிலும் புகுந்து கொள்ளத் திருவுளங் கொண்டார்.

தம்மளவில் அருட்பெருஞ்ஜோதியும் சத்யஞான உணர்வும் பூரணமாகப் பெற்று ஆண்டவருடன் ஒன்றித்து சகஜ நிலையில் வாழ்ந்தாலும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை உலகுக்கு வரவேற்கும் வகையில் சத்ய ஞான சபைக் கோவிலையும் ஜோதி தீப வழிபாட்டையும் ஏற்படுத்தினர். இன்னும் சொல்லப் போனால் 1872ம் ஆண்டில் உலகத்தின் பொருட்டு அதன் பொதுப் பிரதிநிதித்துவம் வாய்ந்த இடமான (as a representative place of the earth) "பொது வளர் திசை" எனும் வடலூர்ப் பெரு

வெளியில் நேரடியாக ஜோதி ஆண்டவர் வந்து அமர்ந்து நிலை பெறுவதை மிகமிக எதிர்பார்த்து அச்சபைக் கட்டிடத்தை ஆறு மாத காலத்துள் விரைவாகக் கட்டி முடிக்கச் செய்து திறந்து வைத்தார். இடை இடையே சில முறைகள் ஒதுக்கம் சென்று அதன் வருகைக்காக முனைந்தார். ஜோதி மந்திர மகா உபதேசம் செய்து சன்மார்க்கக் கொடியேற்று விழா 1873ல் நடத்திய போதும் அதன் வருகையை மிக எதிர்பார்த்தார் எனத் தெரிகிறது. முடிவில் 30—1—1874 தேதியில் ஜோதி ஆண்டவர் தாம் இருந்த இடத்தில் வந்து வீற்றிருந்ததை "சபை விளம்பரம்" மூலம் மக்களுக்கு அறிவித்து அதை என்றென்றும் அவ்விடத்தில் நிலைபெறச் செய்வதற்காகவும் எல்லோர் உடம்பிலும் புகுந்து கொள்வதற்காகவும் அழியா உடலைக் கரைத்தார் எனத் தெரிகிறது.

"இவ்வுலகமெலாம் களிப்படைய **நமது சார்பின்** அருட்பெருஞ்ஜோதி தழைத்து மிக விளங்கும் திருநாள்கள் ஆம்" எனப் பாடுவதால் தம்முடை கூட்டுச் சாதனையால் உலக மக்களின் கூட்டுப்பரிணாமத்தின் பொருட்டு இங்கு அருட்பெருஞ்சோதி நிலைபெற்றுத்தழைத்து விளங்கச் செய்வதற்கு **தம்மை ஒரு கருவியாகக் கருதிச்** செயல்பட்டார் என நன்கு விளங்கும். தம்மை உலகத்தின் பிரதிநிதியாக, இல்லை, இப்புவியுலகாகவே (Eearthconsciousness) அதன் காரண காரியங்களாகவே கருதி ஆண்டவனே தம்மை நாடிக்காணவும் அணையவும் தம்முடன் ஆடவும் இங்கு உலகுக்கு வருகிறார் என திவ்ய வேணுகானத்தின் மூலம் அறிந்து கொள்கிறார் — "திருவம்பலவர் **காரணமும் காரியமும் தாரணி நீயாக உன்னைக்** காணவந்தார் என்று வேணுநாதம் சொல்கின்றதே". ஜோதி ஆண்டவர் வையகத்தில் அமர்ந்து நிலைபெற்று நேரடியாக அரசு செலுத்த வருவதால் அவரை வரவேற்கும்படி எல்லோருரையும் வேண்டுகிறார். தனிப் பெருந்தலைமைக் கடவுள் உலகில் வெளிப்படுவதற்குக் காரியப்படுவதால் (Making a move to manifest on the earth) தம் ஒருவரால் அனந்தம் பேர்களுக்கு உலக மக்களுக்கெல்லாம் நன்மையுண்டாம் என அறிக்கை விடுத்து அறிவித்து அதை நிறைவேற்ற சில நாள் மறைவில் வாழ்ந்து வந்தார் எனத்தெரிகிறது. ஜோதி ஆண்டவரை உலகுக்கு வரவேற்கும் மந்திரமாகவும் அவரை அடைய முதற்சாதனை மந்திரமாகவும், அவர் உலகுக்கு வந்ததும் பெறவேண்டிய ஆன்மலாபங்களைப் பெறும் சாதனை சாத்திய மந்திரமாகவும் "அருட்பெருஞ்ஜோதி" மந்திரத்தை எல்லோருக்கும் வழங்குகிறார். ஜோதி ஆண்டவர் வருவதால் உலக வாழ்வு எல்லாக் கட்டங்களிலும் மலர் வதையும், தாவரங்கள்

பிராணிகள் மனிதர்கள் புதுவாழ்வடைந்து பொலிந்து மேலோங்குவதையும் மனிதர்கள் வானவர்களாகவும், பலம் மிக்கவர் பண்புளோர்களாகவும், மடமையுள்ளவர் மதி பெற்றவர்களாகவும், குற்ற மிகுந்தவர் குணங்கள் நிறைந்தோராகவும் அதாவது உடல், உள்ளம், மனது பொலிவுற்று மாறிப் புதுவாழ்வு அடைவதாகவும், பக்தர்களும் முத்தர்களும் சித்தர்களும் சிறப்புற்று விளங்குவதாகவும் ஆகிய உலகப்பரிணாம வாழ்வின் சிறப்புகளை (Evolution of earthly life due to advent of the divine Light) காட்சியாகப் பார்க்கிறார். மேலும் அருட்பெருஞ்ஜோதியின் வருகையால் உண்மை இரக்கம் உண்மை அன்பு உண்மை அறிவு உண்மைச் செயல்கள் மக்களிடையே நிலைபெறுவதையும் அதனால் சன்மார்க்கம் இனிமேல் சிறந்து விளங்கப்போவதையும் காண்கிறார். அவரது சன்மார்க்கம் ஆண்டவர் நேரடியாக உலகில் வந்து நிலைபெற்றபின்தான் சிறப்பாகச் செயல்பட ஆரம்பிக்கும் எனப் பலமுறை தெரிவித்துள்ளார்.

வள்ளலார் கூட்டுச்சாதனையாக உடலைக்கரைத்த தியாகம் வெற்றி பெற்றதா என ஆராய்வோம். அவர் எதிர்பார்த்தவாறு பேராண்டவர் (ஜோதியாகவோ அல்லது இயற்கைத்திருவண்ணமாகவோ) அவருடைய இருப்பிடத்தில் வந்து அமர்ந்து அங்கு நிலைபேறு அடைந்திருக்க வேண்டும் (As a localised Manifesation) என நிச்சயிப்பதற்கு இடமுண்டு. ஏனெனில், முதலாவதாக தம் இறவா அழியாத் தெய்வீகத் தூல உடலை இறைவன் வீற்றிருந்த ஒரு நேரத்தில் கரைத்து நம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தார். அழிக்க முடியா உடலைக்கரைத்து மறைய முடிந்தது ஒரு சான்றாகும். இரண்டாவது, கரைத்த திவ்ய உடற்பொருள்கள், இறவாத்தாதுப்பொருள்கள் சக்திகள் அவருடைய ஆன்மாவுடன் ஏற்கனவே ஒன்றித்து வியாபக வியாப்பியமடைந்திருந்ததால் இப்பூமியிலேயே அவற்றைப் பதித்து நிலைபெறச் செய்வதற்கும் (Fix the deathless Physical substances in the earthnature) எல்லோருடை உடம்புகளில் புகுந்து கொள்வதற்கும் முடிந்தது என்பது பின் வரும் நிகழ்ச்சிகளால் அறிகிறோம். மூன்றாவது, அவருடைய இறவா உடல்தியாகத்தாலும் ஸ்ரீ அரவிந்தருடை உயிர்தியாகத்தாலும் நம் காலத்தில் 1956 ம் வருடத்தில் ஸ்ரீ அன்னையால் திவ்ய விஞ்ஞானஜோதியை (Supramental Light) இவ்வுலகுக்கு உலகளவில் பரவலாகக் கொண்டுவர எளிதாயிற்று எனலாம்.

வள்ளலார் இச்சோதியை சத்யஜோதி என்றும் ஞான சிதம்பரசோதி என்றும் குறிப்பிடுகிறார். இன்னும் விரித்து " திருச்

சிற்றம்பலத்தில் ஆடும் ஜோதியுட் ஜோதி" Light within Light in the comprehending Supermind) என்றும் "பேரருட் ஜோதியுட் ஜோதி" என்றும் பாடுவதால், அருட் பெருஞ்ஜோதிக்குள் தனித் தலைமைச்சோதி ஒன்று இருப்பதை அறிகிறோம் (Supreme Light of the Supreme Being within the Light of consciousness - Force) இவற்றையே பிரிக்க முடியாத சித்ஜோதி — தத்ஜோதி என்றும் பொதுப் பெயரால் சிதம்பரஜோதி என்றும் குறிப்பிடுகிறார். ஆகவே ஒன்றைக்குறிப் பிடும்போது மற்றொன்றும் கூடவே இணைந்து நின்று செயல் படுவதாகக் கொள்ளவேண்டும். அருட்பெஞ்சோதியாம் சித் ஜோதியுள் விளங்கும் தத்ஜோதியே ஆண்டவர் என அறிய வேண்டும். "ஜோதியுட் ஜோதி" என்றும் "பேரருட் ஜோதியுட் ஜோதி" என்றும், "பேரருட்சோதியே சோதியுள் துலங்கிய பொருளே" என்றும் பாடியிருப்பதைக் கவனிக்க.

மேலும் வள்ளலார் அருட்சோதியையும், அருட்பெருஞ் சோதியையும், அருட்பெருஞ்சோதி ஆண்டவரையும், வெவ்வேறு (சிறப்புப் பொருள்களில் அல்லது ஒன்றுக்கொன்று மிகுதிப்படும் பொருள்களில் கூறுகிறார்.) அருட்சோதியால் அருட்பெஞ்சோதி நாதனைக் கண்டு அவன் நடிக்கும் மன்று கண்டு" எனப்படுவதால், ஆரம்ப சாதனை காலங்களில் அருட்சோதி நமக்கு இங்கேயே வழிகாட்டிச் செயல்படுகிறது என்றும் அருட்பெருஞ்சோதி ஞானப்பெரு வெளியில் உள்ளது என்றும் அதை அங்கு மேலேறிச்சென்று அடையவேண்டுமென்றும் அருட்பெருஞ் சோதியினுள் விளங்கும் நாதனை அல்லது ஆண்டவரை முடிவாக அடைந்து அவருடன் ஒன்றித்து விட்டால் பூரணமான சத்ய ஞான அனுபவமும் சித்தியும் (Integral Realisation of Supermind) அடைந்ததாகும் எனத்தெரிந்து கொள்ளலாம். சத்யஞான உணர்வு நிலைத்தபின் அருட்சோதியே தம் உடலை இவ்வுலகிலேயே தெய்வீக உருமாற்றம் செய்ததாக மேலும் குறிப்பிடுகிறார். ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்து அன்னை, வள்ளலார் கூறும் "அருட்சோதியை" சிறப்பாக வரவேற்று அது அரவிந் தர் கூறும் விஞ்ஞான சோதியின் ஒரு செயல்பாடு எனத் தெரிவித்தார். ஆனால் அச்செயல்பாட்டை விளக்கிக்கூறவில்லை. இதை பின்பு நாம் விளக்குவோம். ஆகவே "அருட்பெருஞ் சோதி" யாம் சத்யஜோதி அல்லது சிதம்பரஜோதி இந்த திவ்ய விஞ்ஞான ஜோதியைக் குறிக்கும் எனக் கொள்ளலாம். வள்ளலார் அருட்பெருஞ்சோதியால் இறவா அழியா உடல் பெற்றதால் இதை அனுசரித்தும் இச்சோதியை திவ்ய விஞ் ஞான சோதியாகக் கருதவேண்டும். மேலும் சத்ய ஞான

பூரண அனுபவத்தில் எல்லா இறை குணங்களும் சத்திகளும் ஒருங்கே இணைந்து இருக்கும். ஆனால் அதேசமயம் ஒரு குறிப்பிட்ட சித்குணத்தை அல்லது சத்தியை முன்னுக்கு வெளிப்பட்டு விளங்கும்படி (To bring into a Frontal Manifestation) விளக்கவும் முடியும். ஆகவே ஸ்ரீ அன்னை அருட்ஜோதியானது விஞ்ஞான ஜோதியின் ஒரு செயல்பாடு எனக் குறிப்பிடும்போது அருட்ஜோதியையும் அதன் கருணையையும் வள்ளலார் தமக்குச் சிறப்பான சுயதர்ம இயல்புகளாக வெளிப்படும்படி அருளினார் எனவும் மற்ற இறை குணங்களும் சத்திகளும் பின்னணியில் வைத்துக்கொண்டு வேண்டும்போது அவற்றை அருளவும் செய்தார் எனவும் கொள்ள வேண்டும். தவிர உலகுக்கு வரும் ஜோதியை குறிப்பாக வள்ளலார் அருட்பெருஞ்சோதி என்றும் அது மிக மிகத்தழைத்து விளங்கும் எனவும் அது ஓவாவாழிநடம் (Progressive Riches of manifestation) செய்யும் என கூறியிருப்பதைக் கவனிக்க வேண்டும். ஜோதி அகவலிலும் விண்ணப்பங்களிலும் அருட்பெருஞ்சோதியே எல்லாமாக விளங்குகிறது என்பதால், தம்மளவில் அதை திவ்ய விஞ்ஞான சோதியாகக் கொண்டிருந்தார் எனத் தெரிகிறது. (தொடரும்)

---

## வள்ளலார் மலருக்கு முதல்வர் கலைஞரின் செய்தி!

கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப் போகவேண்டுமென முழங்கியவர், வடலூர் வள்ளலார். சாதி சமய சாத்திரக் குப்பைகள் என்று கடுமையாக விமர்சித்த புரட்சிக்காரர் அவர். அழகும், துடிப்பும் மிகுந்த தமிழில் அவர் தந்த அருட்பா, சிலருக்கு மருட்பாவாக இருந்தது. எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் ஏற்ற நற்கொள்கைகளை, எடுத்துரைத்து சமரசப் பணியாற்றிய அந்த சன்மார்க்க சீலருக்கு விழா எடுப்பதும், மலர் வெளியிடுவதும் அவரைப் பெருமைப் படுத்துவதற்காக அல்ல. அவர் போதித்த கொள்கை, கோட்பாடுகளை வெற்றி பெறச் செய்வதற்காகத் தான்!

"செங்கோல்" இதழ், வள்ளலார் மலர் வெளியிடுவது இந்த அடிப்படையில்தான். சிலம்புச் செல்வர் ஏந்தியுள்ள செங்கோல் தமிழருக்கு செங்கரும்பென இனித்திடுகிறது; அத்துடன் வள்ளல் ராமலிங்கர் வழி நின்று சமுதாயப் புரட்சியும் செய்திடுகின்றது. தொண்டு செய்யும் தூய உள்ளம் அன்புள்ளம் கொண்டிருந்த வெள்ளுடை வேந்தனின் இலட்சியம் பூத்துக்குலுங்கிட, சிலம்புச் செல்வரின் இந்த நல்லேடு நாளும் பணி புரிகின்றது. இந்த மலர், அன்பு மலர், அமைதி மலர், அருள் மலர், மூட நம்பிக்கை, ஏற்றத் தாழ்வு இவைகளை அகற்றும் எழுச்சி மலர். வாழ்த்துகிறேன்.

அன்புள்ள
மு. கருணாநிதி

("செங்கோல்" மலர் 24 இதழ் 10) நன்றி

# மழை பொழி மழையே !

வானமுதே ! தேன் மழையே ! தெவிட்டாத தென்றலின் துணையே! உவட்டாத உலகுயிர் உணவே ! உயிர்க்குயிரே ! உயிரின் நலமே ! உன் எழில் முகங்காணுது ஏங்குகிறோம் — நீ எங்கு சென்றாய் ? ஏன் மறைந்தாய் ?

அலை கடலின் மறு அமைவே ! ஆனந்த வாரிதியே ! நீ பொய்படுவாயெனில், மெய்படு உலகம் தொய்வுபடுமே ! பயிரினமெல்லாம் தேய்வு பெறுமே ! நெடுங்கடலும் தண்ணீர்மை குன்றிடுமே ! தானமும், தவமும் மறைந்திடுமே! ஒழுக்கமும் அமைந்திடாதே !

அன்புருவே ! அருள் நிலையே ! உன்குளிர்முகக் காட்சியின்றேல் இங்கு மாட்சியில்லை ! உன் கருணை ஆட்சியின்றேல், பெரும்பழி சேர்ந்திடுமே ! உறுபசி நிலைத்திடுமே! ஓவாப்பிணி நிறைந்திடுமே ! உயிரினம் வருந்திடுமே !

கார்முகில் பெற்றெடுத்த காரிகையே ! கலைஊற்றின் நிலையிடமே! நீயின்றேல் தேர், திருவிழா இல்லை ; ஏர், ஏற்றம் இல்லை ! பார் கொஞ்சும் வளமை இல்லை ! அதிகம் ஏன் ? இங்கே தார் கொண்ட பரம்பரையின் செங்கோல் இல்லை !

உயர்புனலே ! உயிர்பெருக்கே ! ஓங்கு புகழ் சமயமெல்லாம் உன் அருள்நோக்கு காத்து நின்றார் ! எங்கும் உயிரினத்தின் துயர்துடைக்க உன் பெரும் பெயர் போற்றி நின்றார் ! ஆயிரம் நாமம் சொல்லி அன்னையே உனை வாழ்த்தி நின்றார் !

விண்ணியல் விரிவே ! மண்ணியல் சொரிவே ! உன் வஞ்சம் தவிர்த்திடுவாய் ! நெஞ்சந்திறந்திடுவாய் ! நன்றி செலுத்த நளின நடைபோட்டு வருக ! அன்றெனிலோ, அனைத்துயிரின் கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டோடி, உன் தாயகமாம் கடலகத்தை எதிர்த்து நிற்கும் ! இது சத்தியமே!

விண்ணகப் பொழிவே ! தண்ணெளிப் பாவாய் ! உன் கண்ணொளிக் காட்டிடுவாய் ! கருணை மனந்திறந்திடுவாய் ! உலகுயிரனைத்தின் தெய்வத் திருமுகம் ஒளிர உன் விழி திறந்து காட்டு !

அமுதே பொழியும் அன்னையே ! வளம் பெருக்க வருக ! உளம் சிறக்க வருக ! பயிர் தழைக்க வருக ! உயிர் பிழைக்க வருக ! வருக ! இன்னுமா இரக்கமில்லை ? வள்ளலே ! உம்மை அழைக்கும் ஆற்றல் எமக்கில்லையாயினும், உம்மை அடக்கியாண்ட எம் குருநாதர் இராமலிங்கப் பெருவள்ளல் அழைக்கிறார் — இதோ ஆணையிட்டழைக்கிறார் ! காலம் தவறாது வந்திடுக !! நிறைவோடு தந்திடுக !!!

“ உயங்கிய உள்ளமு முயிருந் தழைத்திட
வயங்கிய கருணை மழைபொழிமழையே !
என்னையும் பணிகொண் டென்னுளே நிரம்பி
மன்னிய கருணைமழை பொழிமழையே !
உளங்கொளு மெனக்கே யுவகைமேற்பொங்கி
வளங்கொளக் கருணைமழை பொழிமழையே !
நலந்தர வுடலுயிர் நல்லறிவெனக்கே
மலர்ந்திடக் கருணைமழை பொழிமழையே !
தூய்மையாலெனது துரிசெலா நீக்கிநல்
வாய்மையாற் கருணைமழை பொழிமழையே ! ”

(அருட்பெருஞ்சோதி அகவல்)

# இராமலிங்க வள்ளலாரும் இறவா அழியா உடல் கரைந்த கூட்டுச் சாதனையும்

(T. R. துளசிராம், ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம், பாண்டிச்சேரி)

(1974 நவம்பர் இதழ் தொடர்ச்சி)

இருப்பினும் ஸ்ரீ அரவிந்தரும் ஸ்ரீ அன்னையும் சொல்லும் இலட்சியங்களும் குறிக்கோள்களும் வள்ளலாரின் அருட்பாவில் காண்கிறோம். அரவிந்தரும் அன்னையும் தத்தம் ஞானதேகம் கண்டு உணர்ந்திருப்பினும், வள்ளலாரைப் போன்று அந்த ஞான உடல் அவர்களின் தூலஉடலில் பதிக்கப்பெறாது நிலைக்கப்பெறாது போயிற்று (Knowledge — Body not emerging into the physical). என்றாலும் உடல் உருமாற்றத்தைக் கூட்டான முறையாக அதாவது சீடர்கள் மற்றும் உலகத்தினர் அனைவரின் உருமாற்றத்துடன் இணைத்துச் செயல்பட முனைந்தது. அவர்களின் தனிச் சிறப்பாகும். முடிவில் உலகளவில் மரணத்தை (Universal Death) வெல்லவேண்டுமென நினைத்து முயற்சித்தனர். என்றாலும் ஞானஉடல் தூலஉடலிலும் பதிவதுதான் உருமாற்றத்தின் முக்கிய கட்டமாகும். அதனால் தம்மைச் சூழ்ந்த மற்ற அஞ்ஞான தூல உடம்புகளின் ஜடபௌதிகச் சக்திகள் மூலம் வரும் பரஸ்பர போக்குவரத்தால் (mutual exchange of bodily forces) ஏற்படும் தடை விளைவுகளையும் மற்றும் கரு வெளியிலிருந்து (Subconscient Realm) வரும் தடைகளையும் ஆபத்துக்களையும் விலக்குவது சாத்தியப்பட்டு உருமாற்றம் இயல்பாகவும் தன் ஒழுங்குக்கிரமப்படி (Spontaneously and naturally) சீக்கிரமாகவும் நடந்தேறும். வள்ளலாரின் தூலஉடல் உருமாற்றம் அதற்குச் சான்றாகும், என்றாலும் மற்றபடி இலட்சியத்தாலும் கொள்கைகளாலும் யோக முறைகளாலும் ஸ்ரீ அரவிந்தர் அன்னை வழிகளுக்கும் வள்ளலாரின் யோக வழிக்கும் பொருத்த இணக்கமும் அடிப்படையான இசைவும் இருப்பதைக் காண்கிறோம். ஆண்டவர் இந்நிலவுலகின் பரிணாம வாழ்வு வளர்ச்சியை தெய்வீகமாக மேலோங்கச் செய்யும் கூட்டுச்சாதனைப் பணிகளுக்காக வள்ளலாரையும் அரவிந்தரையும் அன்னையையும் ஆகிய மூவரை அவரவரின் தனிச்சிறப்பு வாய்ந்த அனுபவசித்தி நிலைகளின் மூலம் இரகசியமாகவே நிறைவேற்றிக்கொண்டார் என்பதை அறிகிறோம்.

வள்ளலார் (1823—1874) தம் முடிவுக் கூட்டுச் சாதனைச் சித்தியால் மறைந்தாலும் அவரைக் காலத்தால் தொடர்ந்து சீக்கிரமாகவே அரவிந்தரும் (1872—1950) அன்னையும் (1878—1973) நிலவுலகில் அவதரித்து இடத்தாலும் தொடர்ந்து வள்ளலார் வாழ்ந்த நிலப்பகுதியிலே வடலூருக்கே அருகே பாண்டிச்சேரியில் வந்து தவம் இயற்றலாயினா. ஸ்ரீ அரவிந்தர் திவ்ய விஞ்ஞானத்தை உலகுக்குக் கொண்டுவரும் முயற்சியில் முதலில் அதன் ஒரு நுனிப்பாகமாவது பெறக் காத்துநின்று அதன்மூலம் பூரா விஞ்ஞானத்தை இங்கு கொண்டுவர நினைத்தார். அவர் சமாதியடைந்த தறுவாயில் விஞ்ஞான சோதியை தாம் விட்டுப் பிரிந்த உடலில் கொண்டு வந்தார். அவ்வுடல் சோதி தங்கியிருந்த வரை நான்கு நாள் கெடாமல் இருந்தது. வள்ளலார் வாக்கு அளித்த அருட்பெருஞ் சோதியாம் விஞ்ஞான சோதியை 1956ம் ஆண்டு பிப்ரவரி 29 தேதியில் அன்னை உலகுக்குக் கொண்டுவந்தார் ஆசிரம விளையாட்டு மைதானத்தில் ஆண்டவரின் சாந்நித்தியம் நிதரிசனமாக வீற்றிருந்த (Concrete Presence of the Divine) மாலை வேளையில் அன்னை மேலுலகத்திலிருந்து (வள்ளலார் ஜோதி அகவலில் குறிப்பிடும் தெறிக்கக்கூடிய வான்கதவு "அறம் தெற" உடைத்து ஜோதியைக் கொணர்ந்தார். இதேபோன்று ஆண்டவரின் சாந்நித்தியம் தாம் வாழ்ந்த இடத்தில் வீற்றிருந்த சமயத்தில் 30—1—1874 யில் தன் அழியா உடலை அதன் இறவாப் பொருள்களை இங்கேயே கரைத்து இப்பூவுலகின் இயற்கையில் பதித்து மரணமிலாப் பெருவாழ்வுக்கும் அருட்பெருஞ்ஜோதி இங்கு நிலைபெறுவதற்கும் இராமலிங்கப் பெருமான் அஸ்திவாரம் இட்டார் என அறியலாகும். ஆண்டவரை வடலூரில் சிறப்பாக நிலைபெறவைக்கவும் அவரது சக்திகள் அங்கே உறைந்து ஒருமித்துப் பலப்படும்படியும் செய்தார் என அறியவேண்டும். இதனால் எல்லோர் உடம்பிலும் புகுந்துகொள்ளும் வாய்ப்பும் சக்தியும் பெற்றார் என நினைக்கிறோம். அவர் வாழ்ந்து அழியா மூவுடல் சித்திபெற்ற இடத்தில், சித்திவளாகத் திருமாளிகையில், விசேஷமான இறை அமுத சக்திகள் மிகவும் சூட்சுமமாகச் செயல்பட்டு விளங்கி அங்கு தியானபூர்வமாகத் தங்குபவர்களின் உடலிலும் இலகுவாக ஊடுருவி தூக்கம் வெகுவாக இயல்பாகவே நீக்கி அதன் கால அளவு குறைத்து அதன் தாமசம் நீக்கி, குறைந்தநேர தூக்கத்திலும் ஓர் உள்ளுணர்வு நீடித்து ஏற்படச்செய்து, தூக்கக் குறைவால் உடல் வாடி பலவீனப்படுவதற்குப் பதிலாக உடல் நலமும் பலமும் ஓங்கச்செய்து வருவதை பலர் அனுபவித்துள்ளனர். அங்கு அமுதம் நிலவுவதாகச் சொல்லப்படுகிறது. நாடிநரம்புகளும் உடலும் இசைவு பெற்று (nerves and body become harmonised) உடல்களைப்பும் வெகுசீக்கிரத்தில் நீங்கித் தெம்பு

ஏற்படுகிறது. மற்ற தத்துவங்களின் நிலைகளிலும் ஆன்ம நிலைகளிலும் அங்கு கிடைக்கும் அனுபவங்களை நாம் விவரித்துச் சொல்ல வேண்டுவதில்லை. உலகளவிலும் வள்ளலார் இப்போதும் செயல்படுகிறார். அரவிந்த ஆசிரமச் சூழலிலும் நாடி நரம்புகளும் உடலும் இசைந்து களைப்பு சீக்கிரம் நீங்குவதால் நம் உடம்பு அச்சூழலிலுள்ள சக்திகளைக் கிரகித்துக் கொள்வதை ஒருவாறு அறிகிறோம். அச்சூழலைவிட்டு வெளியூருக்குச் சென்றால் கிரகித்த சக்திகளை உடல் வெளியே தள்ளி விடுவதையும் அறிவோம்.

தெய்வீக மனித உணர்வு எனும் சூபர்மான் கான்ஷியஸ்னஸ் அன்னை உடலில் செயல்பட்ட இரண்டு ஆண்டுகளில், 1969ம் ஆண்டில் அன்னை அவர்கள், "இனி எல்லோருக்கும் தெரியக் கூடிய ஒளிமயமான உடலில் அவதாரம் எடுத்து ஒருவர் வருவதாகுக" எனத் தம் திருவுளம் தெரிவித்ததையும், 1970ஆம் ஆண்டில் தம்மைக் காணவந்த பெண்மணி ஒருவளின் அந்தராத்மாவே விஞ்ஞானமய தூல சரீரத்தையும் (Supramental physical body formed by soul itself directly) நேரடியாகப் படைத்துத் தோன்றப்போகும் ஒரு காட்சியைப் பார்த்ததையும் கவனத்திற் கொள்ளவேண்டும். வள்ளற் பெருமான் தாம் திருக்காப்பிட்டுக் கொண்ட தருணத்தில் வாக்களித்தபடி அதாவது அருட்பெருஞ் சோதி ஆண்டவர் உலகுக்கு வந்தபின் தாம் உடல் வடிவத்தில் வருவதாகக் கூறியதாலும், இப்போது 1956ம் வருட முதலாக விஞ்ஞானஜோதி உலகில் வெளிப்பட்டு விட்டதாலும் அன்னை சொல்படி ஒளிமயமான அவதாரம் ஒன்று ஏற்படும் வாய்ப்பு இருப்பதாலும் கருணைவள்ளலே புதுமைத் தெய்வீக ஒளிமயமான உடல் தாமாகவே நேரடியாகப் படைத்து வருவதற்கான சூழ்நிலை இப்போது உருவாகியுள்ளது எனச் சொல்லலாம். அருட்பெருஞ் சோதி ஆண்டவரும் திருவுளங்கொண்டு இதைக் கூட்டிவைப்பாராக.

தமக்கு மரணமிலாப் பொன்னுடம்பு சித்திக்கப்பெறும் ஒரு நேரத்தில் தன் சொந்த தனிப்பட்ட உடலின் இறவாமை பற்றி பேசுவதோடு நில்லாமல் உலக அளவில் செயல்படும் மரணத்தை அல்லது கூற்றுவனை (Death as an universal power) நோக்கி, "வையகமும் வானகமும் மற்றகமும் மற்றுலகங்களும் இன்னும் முடிவாகப்பரண் ஆகிய ஆதாரக் கோட்டைத்தளமான பேரிருட்டு பெருநிலமும் (Vast realm of Inconscient Darkness) இருட்பெரும்கார் அள்ளற்கடல் என்றும் இடுவெளி என்றும் சொல்லுவார்) விட்டு நீங்கி ஓடிப் பசையற்று ஒழிந்திடுக" என்று வள்ளலார் ஆண்டவன் மீது ஆணையிட்டுத் தம்திருவுளம் தெரிவித்துள்ள

தாலும், "இங்கு இவ்வையகத்தில் இருப்பாய் எனில் முழுதும் படித்து விடுவேன் இது அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் அருள் ஆணை" என்று ஆணையிட்டுக் கூறுவதாலும், அதை ஆண்டவரின் சொந்தப் பிள்ளையாக (representative of the divine) இருந்து நிறைவேற்றி வைப்பதை சூசகமாக உணர்த்துவதாலும். தம் மளவில் மரணத்தை வென்றது போதாததுபோல் உலகளவிலும் அதன் செயலை ஒடுக்கி அகவினத்தாருக்கு சாகாவரமும் கொடுப்பதற்கும் இறந்தவர்களை உடலுடன் உயிர் எழுப்புவதற்கும் வள்ளற்பெருமான் இனஅவதாரம் எடுக்கும் சாத்தியக்கூறு இருக்கிறதென்பதை அறியவேண்டும். ஸ்ரீ அரவிந்தரும் தாம் எழுதிய சாவித்திரி காவியத்தில் உலகளவில் செயல்படும் மரணத்தை (universal death) அவன் தங்கும் இருட்டு நிலத்திலேயே ஒழிப்பதற்கு அன்னை சாவித்திரியாக அவதாரம் எடுத்துச் செயல்படுவதை அகக்காட்சியாகப் பார்க்கிறார். இது ஒரு தடவையிலோ பல தடவைகளிலோ பல வழிமுறைகளிலோ சில அவதாரங்களின் மூலம் நிறைவேற்றக் கூடியதாக இருக்கலாம். ஆகவே நமக்கு இதை நம்புவதற்கு இப்போது தயக்கம் ஏற்பட்டாலும் வள்ளலாரின் வாக்குறுதியும் ஸ்ரீஅரவிந்தரின் வாக்குறுதியும் இவ்விஷயத்தில் ஒத்துப்போவதைக் கவனிக்கவேண்டும்.

மேற்சொன்ன பல வழிமுறைகளில் ஒருவழி ஸ்ரீ அரவிந்தரும் ஸ்ரீ அன்னையும் நடைமுறையில் செய்து காட்டிய வழியாகும். அதாவது, தீராதபட்சத்தில் மரணத்தையே இரகசியமாகத் தழுவி அந்த வாய்ப்பில் தம்பொருட்டு இல்லாவிடினும் உலகத்தின் பொருட்டு அதை முடியுமளவுக்கு வெல்வது அல்லது முடிவில் பின்னொருகாலத்தில் வெற்றி பெறுவதை மேலோங்கச் செய்யும் முயற்சிகளை தற்போது செய்வது (take effective steps for an eventual victory if not an immediate victory over universal death) என்பதாகும். ஸ்ரீ அரவிந்தரின் இறந்த உடலில் (அதாவது அவருடைய ஆன்மா பிரிந்தபின்) ஜோதி இறங்கி நிரம்பித் தங்கியிருந்த நான்கு நாட்கள்வரை அதைக் கெடாமல் இருக்கச் செய்தது இவ்வழியினை ஒருவாறு குறிக்கும் என்க. விஞ்ஞான ஜோதி உலகளவில் 1956ம் வருடமுதலாக வெளிப்பட்டுவிட்டதால் அன்னை, முதுமையுற்றுக் கூனுற்ற தம் உடலை உலகப் பொது உடலாகக்கருதி அதனுள், சீடர்கள் மற்றும் தம்மைக் காணவருபவர்கள் ஆகியவர்களின் உடற்கஷ்டங்களும், மற்றும் பொதுவாகக் கருவெளி (Subconscient realm) மூலம் உலக மக்கள் அனைவரின் உடல் உபாதைகளும், மாசுகளும் அஞ்ஞான உடற்தாக்குதல்களும் தம் உடலுள் மடைதிறந்தாற்போல் புகவிட்டு அவற்றை ஒருவாறு அனுபவித்தும் சமாளித்தும் தம் உடல் உருமாற்றத்

தால் படிப்படியாக அவற்றின்மீது வெற்றி கொண்டும் அவ்வெற்றி உலகின் பொதுவெற்றி என்னும்படி கூட்டுச்சாதனையாக நிறைவேற்றிவந்தார். விடாப்பிடியாக உடலைக் காப்பாற்றி அதன் எல்லாக் கஷ்டங்களையும் மரணத்தின் எல்லா அவஸ்தைகளையும் நிலைகளையும் உயிருடன் இருந்தபோதே அனுபவித்துக்கொண்டு அவற்றின்மீது வெற்றி பெறுவதை வழியாகக் கொண்டதனால் அவருடைய உடல் உருமாற்றத்தின்போது மரணமிலா வாழ்வும் மரணமும் இரண்டும் கைகோர்த்து தம் உடம்பில் செயல்பட்டதாகத் தெரிவித்தார். ஒரு நிலையில் அன்னை, மிக இளமைவாய்ந்து தோற்றம் மாத்திரம் தென்பட்டு ஆனால் தொட்டு உணரமுடியாத தம் பிரணவ தேகத்தை 1972ம் ஆண்டில் பார்த்தார். ஞானதேகமும் தம் தூல உடலில் சிறிது நேரம் வந்ததை உணர்ந்தார். எனினும் அது உடலில் நிலைகொள்ளவில்லை. இக்கூட்டுச்சாதனை வழியின் மூலம் பல ஜன்மங்கள் எடுத்தாகிலும் உலகளவில் செயல்படும் மரணத்தின்மீது வெற்றி பெறப்போவதாகவும், இதற்காக உலகின் இயற்கையை, உலக மக்களை, தயார் செய்துகொண்டே சாதிக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். அவருடைய முறை சிறப்பானது. அதை மேலெழுந்தவாரியாகப் பார்த்து அவர் அடைந்த மரணம் மற்ற மகான்கள் சமாதி அடைந்ததைப் போன்றது என நினைக்கக்கூடாது. மரணத்தின் இடையே மரணத்தைத் தழுவி அதனை வெல்லும் மகத்தான தியாகம் எனக் கொள்வோம்.

வள்ளலார் ஜோதி ஆண்டவர் வந்தபின் உடல்வடிவம் எடுத்து வருவதாகவும் பக்குவமுள்ளவர்களுக்குத் தாமே மரணமிலாப் பெருவாழ்வு அளிக்கப்போவதாகவும் உணர்த்தியுள்ளார். மேலும் முதியவர்கள்கூட வாலிபராவதும், இறந்தவர்கள் மீண்டும் உயிர் பெற்று எழுவதும் இவ்வுலக இயற்கையின் செயல்களாக நடக்கும் என அறிவித்துள்ளார். இப்போது திவ்யஜோதி உலகில் நிலை பெற்றுவிட்டதால் இனி வள்ளற்பெருமான் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக உணருவோம். தவிர ஸ்ரீ அரவிந்தர் அன்னை வள்ளலார் மூவரும் உலகவாழ்வு தெய்வீக உண்மை வாழ்வாக மலர இங்கு மறுபடியும் வருவதாகக் கூறிச் சென்றார்கள். இக்கருத்து ஒற்றுமையையும் கவனிக்கவேண்டும். அவர்கள் தம் சொந்த முத்தியையோ சித்தியையோ அல்லது தமக்காக மட்டும் சாகாவரத்தையோ நாடவில்லை. கூட்டுச்சாதனையாக உலகளவில் உலகின் மக்களுக்கு எல்லாம் தெய்வீக வாழ்வு அமைவதற்கு மீண்டும் மீண்டும் சத்திய ஞானத்துடன் ஞான உடல்பதிந்த தூல உடலில் வருவதாயுள்ளனர். முத்தி கிடைத்தால் பிறப்பு என்னும் பேச்சு இல்லை என்பது பழய சித்தாந்தம். இது மாறிவிட்டது.

முத்திக்குப்பின் பலபல சித்திநிலைகள் உள. முடிவான சித்தி மரணமிலாப் பெருவாழ்வாகும். அதன் வழியாக உலகக் கூட்டுப் பரிணாமத்தை மேலோங்கச் செய்தலும் ஆம்.

பரிணாமக்கிரமப்படி தெய்வீக வாழ்வு உலகில் மலர பல ஆயிர வருடங்கள் பிடிக்கலாம். இருப்பினும், அருட்பெருஞ்சோதி இங்கு நிலைபெற்றுவிட்டதால் அது நிச்சயம் நடந்தேறக்கூடியதொன்றாகி விட்டது. தவிர ஒரு சிலர் ஆண்டவன் அருளால் எப்போதும் முன்னோடியாக விளங்கி முற்செல்வர். ஆகவே இனி வள்ளலார் உடல் எடுத்து வருவதாயின் அது எப்படிப்பட்ட உடலாக இருக்கும் என்பதை அவர் ஏற்கனவே அடைந்த அனுபவ சித்திநிலைகளைக் கொண்டும் வருங்காலத்தைப்பற்றி மொழிந்தவற்றைக் கொண்டும், அரவிந்த ஆசிரமத்து அன்னை எதிர்பார்த்துப் பொதுவாக மொழிந்தவற்றைக் கொண்டும் ஒருவாறு நாம் உருவாக்கிப் பார்ப்போம்.

அசாதாரண சம்புபட்ச சிருஷ்டியில் (Supramental creation) சொல்வதுபோல் அவருடைய ஆன்மாவே நேரடியாகத் திவ்ய உடலைத் தாமாகவே படைத்துக்கொண்டு தெய்வீக சுயம்பு அவதாரமாக இந்நிலவுலகில் தோற்றிக்கொள்ளுவார். தெய்வீகமான பிராண இந்திரியங்கள், உள்ளம், மனம் முதலிய எல்லாத் திவ்ய தத்துவங்களையும் கருவி கரணங்களையும் கொண்டு அது விளங்கும். பிராணவதேகம் ஞானதேகம் இவற்றின் சிறப்பியல்களையும் கொண்டு, திவ்யமான தூல உடலிலிருந்து சூட்சுமப் பிரணவ உடலுக்கும் ஆதிசூட்சும ஞானஉடலுக்கும் மாறுவதும் அல்லது புகுவதும் மீண்டும் திரும்பி இயங்குவதற்கு சுதந்தரமும் பெற்றதாய் விளங்கும். தூலஉடலிலே பிரணவதேக ஞானதேக இயல்புகளை வெளிக்காட்டும் சுதந்தரம் பெற்றதாய் விளங்கும். தூல உடலுக்கே சிறப்பாக உரித்தான திவ்ய இயல்புகளை வெளிக்காட்டும் சக்தியுடையதாயும் இருக்கும். மூவுடலிலும் ஒருங்கே சமரச இணைவுடன் நிலைத்துச் செயல்படுவதற்குப் ((Integral harmony of the triple deathless body — the physical, subtle and causal) பூரண சுதந்தரமுள்ளதாய் விளங்கும். எல்லோரும் பார்க்கும்படி பொன்னொளி கொண்ட தெய்வீக அழகு நிறைந்த பொன்னுடலாக, இறவா அழியா உடலாக, தூக்கம் மறப்பு நிழல்சாயை இல்லா உடலாக, வேண்டும்போது இரண்டு மூன்று பலவான உடல்களை ஒரேசமயத்தில் படைத்துக்கொள்ளும் உடலாக, தூக்கம் இன்றியே மெய்இன்ப ஊக்கமும் ஆக்கமும் உள்ள உடலாக, ஆண் பெண் அலி எனப் பால்வேற்றுமை இல்லா உடலாக (sexless body) இறைகுணங்களை வெளிப்படையாக

வெளிக்காட்டும் உடலாக, மற்றவர்கள் உடலையும் உருமாற்றம் செய்யக்கூடிய உடலாக, அதாவது தன் பொன்னொளியால் அல்லது தன் மரணமிலா இயக்கச் சக்திகளால் (vibration of the deathless physical bodily forces) அல்லது தன்னை தழுவி அணைவதால் மற்றவர்களின் உடல்களையும் உருமாற்றம் செய்யும் உடலாக, பக்தர்கள் வேண்டும் உருவத்திலும் வடிவத்திலும் தோற்றிக்கொள்ளும் உடலாக, தான் அவதாரம் என வெளிப்படையாகத் தெரிவிக்கும் உடலாக — அதாவது, பூர்வஜன்ம அடையாளங்களையும் அவற்றின் தொடர்ச்சிகளையும் தாம் இன்னாரென அடையாளம் தெற்றெனத் தெரிவிக்கும் உடலாக, ஆண்டவரின் நேர் பிரதிநிதியாய் அருட்சித்திகள் செய்யும் உடலாக நம் உடலின் அடிமூலத்திலிருந்துகூட இந்திரியம் உள்ளம் மனம் போன்ற மற்ற மேல்தத்துவங்களையும் கருவிகளையும் ஞானஉணர்வுடன் இயக்குவிக்கும் சக்திகளை அளிக்கும் உடலாக, உயர்வற உயர்ந்து இயல்பாகவே மரணமின்றிய தெய்வீக சம்புபட்ச சிருஷ்டி இனத்தாரை நேரடியாகத் தோற்றிப் படைக்கும் உடலாக (Supramental race of beings), அல்லது அதற்கு வகையும் வழியும் துணையும் செய்யும் உடலாக, இப்போது நடக்கும் அணுபட்ச சிருட்டியில் பல ஞானிகளும் மரணமிலாப் பெருவாழ்வு அடைய அவர்களின் உடல் உருமாற்றம் செய்விக்கும் உடலாக, இவ்வகையில் சூபர்மென் (Supermen) என்னும் இனத்தவரைத் தோற்றுவிக்க வகைசெய்யும் உடலாக, ஆண் பெண் சேர்க்கையின்றிய புதுவகைப் பிறப்பு முறைகளான பிரக்ருதிபச்ச பரமாணுபட்ச இடைச் சிருட்சிகளையும் (அதாவது வாக்காலும் பார்வையாலும் கருதரிக்கச் செய்தல்) தோற்றுவிக்க வகை செய்யும் உடலாக, தத்தம் பரிணாமக்கிரம முன்னேற்றத்தின்படி வாழும் பலவித பட்ச சிருட்டி இனத்தவர்கள் எல்லாம் சம்புபட்ச சிருட்டி இனத்தவரின் ஆதரவில் நின்று மேலோங்க வகைசெய்யும் உடலாக பௌதிக உலக முழுதும் வியாபித்து எல்லோர் உடம்புகளுடன் தொடர்புகொண்டு செயல்படும் உடலாக, தம்முடன் தொடர்புகொள்ளும் அனைவரையும் கட்டாயமாகத் தூய்மைப்படுத்தி ராகாதிகளாகிய பச்சைத் திரைகள் (removing the green veil of vital desires) நீக்கும் பக்குவம்படுத்தும் உடலாக, இறந்தோரை எழுப்பும் உடலாக, முதியோரைக்கூட இளமையுற உருமாற்றம் செய்யும் உடலாக இருக்கும் என நிச்சயிக்கத் தோன்றுகிறது. வளமைமிக்க தெய்வீக வாழ்வை உலகிலேயே உருவாக்கும் காலம் நாம் வாழும் காலம் என நிச்சயிப்போம்.